2255
PUBLIC LIBRARI
JAFFNA

# சிறுவர்காவிய



# ி மான்

த. துரைசிங்க

JPL
C2255

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

பொது நூலகம்
யாழ்ப்பாணம்
KOHA JPL



# மாதவி மாண்பு

PUBLIC LIBRARY,
JAFFNA.

த. துரைசிங்கம் B. A. (Hons)

86440

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
86440C.C

முதற் பதிப்பு : ஆவணி 1986.

(C) உரிமை : நூலாசிரியருக்கு.

விலை : ரூபா 5-50

894.8111 ஸ்ரீ.

அச்சுப்பதிப்பு :
ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்,
63, B. A. தம்பி வீதி,
யாழ்ப்பாணம்.

PUBLIC LIBRARY,
JAFF

வெளியீடு :
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

# காவியத்துட் புகுமுன் — !

ஆடற்கலை அரசி மாதவி. சிலப்பதிகாரக் காப்பியத்தில் இடம்பெறும் பாத்திரங்களில் இவளும் ஒருவள். கன்னித்தமிழ் வளர்த்த காவிரிப்பூம் பட்டினத்தில் தோன்றிய கட்டழகி. சித்திராபதியின் செல்வத் திருமகள்.

ஆடலொடு பாடலும் நன்கு கற்று அனைவரதும் உளம் கவர்ந்தவள். மன்னவனது பாராட்டைப் பெற்றவள். பச்சை மாலையும், தலைக்கோல் பட்டமும், ஆயிரத்தெட்டு கழஞ்சு பொன் பரிசும் பெற்ற நடனப் பேரொளி.

இத்தகு சிறப்புப்பெற்ற மாதவியின் மீது விடுதலறியா விருப்புக் கொண்டான் கோவலன். அவள் ஆடலில் மயங்கினான். தன் வீட்டை மறந்தான். கண்ணகியை மறந்தான். தர்மக்கோட்டையும் மறந்தான். மாதவியுடன் கூடி வாழ்ந்தான். அவர்களது வாழ்விலும் விதி குறுக்கிட்டது.

பூம்புகாரில் இந்திர விழா கோலாகலமாக நடைபெற்றது. மக்கள் வெள்ளம் அங்கு அலைமோதியது. ஆடற் கலையரசி மாதவியின் நடனம் மக்கள் அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியது. அந்தோ! பாவம்! மாதவியின் ஆடலும் பாடலும் கோவலன் மனதில் ஐயத்தை ஏற்படுத்தியது. அதன் விளைவு இருவருக்குமிடையே பிரிவினை ஏற்படுத்திற்று.

மாதவியைப் பிரிந்து தன் வீடு சென்றான் கோவலன். கண்ணகியுடன் கூடி மதுரை மாநகர் நோக்கிப் புறப்பட்டான். அங்கு வஞ்சனையாற் கொலையுண்டான்.

கோவலன் பிரிவு — அவனது மரணம் அனைத்தும் மாதவியின் மனதில் வேதனைத் தீயினை வளர்த்தன. துறவு வாழ்வினை மேற்கொள்ளத் தூண்டின. அறவண அடிகளின் அறவுரைகள் அவள் உளத்திற்குச் சாந்தி அளித்தன. துறவு வாழ்வினை மேற்கொண்டாள்.

கணிகையர் குலத்தில் தோன்றிய மாதவி கற்பரசியாகவே விளங்கினாள். அவளது மாண்பினை இம் மாநிலத்தோர்க்கு எடுத்துரைக்கும் வகையில் உருவானதே இக் குறுங்காவியம். காவியத்துட்புகுந்து களித்திடுவீர்..........

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
86440



ஆடற் கலையரசி மாதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

# மாதவி மாண்பு.

## காவிரிப்பூம் பட்டினம்.

சோறூடிப் பசி தணிக்கும்
சோழ வள நாட்டினிலே
ஆறோடிக் காவேரி
அலைகடலைத் தான் தழுவும் 1

அலையேறும் துறை யருகே
அமைந் தெழிலைக் காட்டுவதும்
கலையேறும் புகழ் பெற்ற
காவிரிப் பூம் பட்டினமாம் 2

மரக்கலங்கள் வந்து வந்து
மக்களுக்குத் தரம் மாற
சரக்குகளை வாங்கி விற்கும்
சலியாத வாணிப மாம் 3

இடம் பிடித்த பழந்தமிழர்
இல் வாழ்வும் பண்பாடும்
படம் பிடித்துக் காட்டுமுயர்
பைந் தமிழார் பழம்பதியாம் 4

நிலை யார்ந்த செல்வமொடு
நிறைந் திருந்தார் குடிமக்கள்
கலை யார்ந்த சான்றோரைக்
கண்ட துவும் அந்நகரே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதவி தோற்றம்.

கன்னித் தமிழ் வளர்ந்தோங்கும்
காவிரிப் பூம் பட்டினத்தில்
சின்ன இடைக் கணிகைகுல
சித்திரா பதி என்பாள்
மான் போல் விழி யழகி
மாதவியாம் புத்திரியை
இன்பாகப் பெற்றெ டுத்தான்
இனிதாக வேவளர்த் தாள். 6

குலத்துக்கோர் சுடர் விளக்காய்
வந்துதித்த மாதவியும்
குலவு மெழில் தோற்றத்தில்
செந் திருவை ஒத்திருந்தாள் 7

நலம் மிகுந்தாள் ஏழாண்டில்
நடன மொடு பாடலையும்
நன்கு கற்ருள் நானிலத்தோர்
நயக்கும் பெண் அழகியவள் 8

வேறு

பன்னிராண்டு பருவப் பெண்ணுய்
பரவும் இளமைக் கலைதோன்ற
மன்னும் தவத்து மாதவரும்
மயங்க ஈர்க்கும் தன்மையவள் 9

மாதவி கற்ற கலைத்திறனை
மன்னன் காண வேண்டியங்கு
ஏதமின்றி அரங் கெடுத்தார்
ஏற்ற நன்ஞள் குறித்தாரே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கமைப்பு.

ஓவியத் திரைகள் இட்டார்
ஒளிவளர் விளக்கு வைத்தார்
பாவிய கடலில் வந்த
பளிங்கொளி முத்தம் வைத்தார். 11

விதானமும் கட்டி னார்கள்
விளங்கு பூந்தூண் நிறுத்தி
நிதானமாய் அழகு செய்தார்
நிரைபட மாலை தூக்கி 12

நாட்டிய ஆசா னோடு
நல்லிசைக் கலைஞன் வந்தான்
பாட்டிலே நயமும் காணும்
பாவலன் வந்து நின்றான். 13

மத்தளம் குழலும் யாழும்
மற்றுள தாளம் நன்றாய்
ஒத்திசை பயின்றார் கலைஞர்
ஒத்துப்பின் அணியில் நின்றார். 14

ஆடல்கொள் அரங்கு முன்னால்
அரசனும் அமர்ந்தான் மக்கள்
பாடலும் பரதம் கண்டு
பரவச மாகி நின்றார். 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதவி நடனம்.

மாதவி அரங்கு வந்தாள்
வலக்காலை முன்னே வைத்து
மாதவள் இறையைப் போற்றி
மங்கல இசையும் சொன்னாள். 16

குழலொடு முழவும் யாழும்
குரல்வழிச் சென்றே ஒலிக்க
அழகிய கையில் கண்ணில்
அபிநயம் காட்டி நின்றாள் 17

பூங்கொடி அசைந்தாற் போல
பொலிவுடன் நடனம் ஆடி
ஆங்குள மக்க ளோடும்
அரசனை மகிழ வைத்தாள் 18

மன்னனும் மகிழ்ந்து பச்சை
மாலையும் தலைக்கோல் பட்டம்
துன்னிய ஆயிரத் தெட்டு
தொகையுழ கழஞ்சு பொன்னும் 19

பரிசென அளித்தான் மன்னன்
பார்த்தவர் மகிழ்ந்தார் ஆடல்
அரசியாய் விளங்கி னாளே
அகிலமும் அறிந்து போற்ற. 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலையின் மயக்கம்.

எண்ணிய சிறப்புப் பெற்ற ஏந்திழை சுற்றத் தாரும்
கண்ணிய மாகத் தங்கள் குலமுறை கருத்தில் கொண்டு
நண்ணி யோர் கூனிப்பெண்ணை நாதியே வருக என்று
மன்னவன் அளித்த பச்சை மாலையைக் கையில் ஈந்தார். 21

கோடிய கூனி ஆனாள் கொண்டது முடிக்க வல்லாள்
தேடிய குமரர் செல்லும் தெருவினில் வந்து நின்றாள்
நீடிய மாலை காட்டி வாங்குவோர் நில்லும் என்று
கூடிய விலையும் பொன்னே ஆயிரத்தெட்டே என்றாள். 22

மாலையை வாங்கு வோர்க்கே
மாதவி மனையாள் என்றும்
சாலையில் நின்று சற்றே
சாற்றினாள் உரக்க ஆங்கே 23

குறைவிலாச் செல்வன் மைந்தன்
கோவலன் அச்சொல் கேட்டு
நிறைவினால் ஆவல் மிஞ்ச
நீட்டினான் கேட்ட பொன்னை. 24

மாலையை வாங்கிக் கொண்டான்
மற்றுமோர் நினைவும் இன்றி
மாலையும் அளித்தா ளோடு
மாதவி வீடு சேர்ந்தான். 25

மாதவி இடத்துத் தீரா
மயக்கமும் விருப்பும் கொண்டான்
ஏதமில் கண்ணகி என்பாள்
இனிய தன் துணை மறந்தான். 26

வீட்டையும் மறந்தான் இல்லாள்
மீட்டலும் மறந்தான் தர்மக்
கோட்டையும் மறந்தான் ஆங்குக்
கூடியே வாழ்ந்து வந்தான். 27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திர விழா.

காவிரிப்பூம் பட்டினத்தில் கண்டு மக்கள்
களிப்பதற்குக் காத்திருந்த வேனிற் காலம்
பாவிரிக்கும் பண்ணொலிக்கும் பாடல் காண
பண்டிகையும் வருமென்றே இன்பம் கண்டார். 28

சித்திரையில் முழுமதியும் தோன்றும் காலம்
தேனொழுக பூமலர்ந்து செழிக்கும் தேசம்
பத்தியுடன் இந்திரனை வணங்கி வாழ்த்தி
பரவிஉயர் வரங்கேட்க நோற்கும் நாளாம். 29

மன்னனது செங்கோலின் நீதி வாழ
மற்றுமுள பகைநோயும் பசியுந் தாழ
பண்ணுகின்ற சாதிமதச் சழக்கே யின்றி
பட்டினத்தில் இந்திரவிழாக் காணும் காலம் 30

பூம்புனல் பாயும் பொன்னி
பெருந்துறை அருகே தூய்மை
ஆம்புனல் நிறையப் பொன்னின்
குடத்தினில் அள்ளி வந்தார். 31

ஆக்கிய கொலுவைச் சூழ
அமைச்சரும் பிறரும் நின்றார்
தேக்கிய நீரால் இந்திரச்
சிலையினை முழுக வார்த்தார். 32



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலரன் முதலாம் தெய்வ
வணக்கமும் செய்தார் நாட்டின்
ஆலயந் தோறும் வேள்வி
ஆக்கினுர் அருளும் பெற்றுர். 33

வாடலும் திகைப்பும் இன்றி
மாதவி மங்கை நல்லாள்
பாடலும் பண்ணும் தாளம்
யாங்குற மேடை மீதே
ஆடலும் பதி(ன்) ஞென்ருக
ஆடினுள் இந்திர விழாவில்
கூடிய மாந்தர் எல்லாம்
குதூகலித் தேற்றம் சொன்னுர். 34

முப்புரம் எரித்த வேகம்
முருகனும் அசுரர் தம்மை
தப்பறப் பிளந்த வீரம்
தழலெழும் காளி கோபம்
செப்பிய மாயன் லீலை
திருமகள் மருவும் கோலம்
ஒப்பிலா நடன பேதம்
ஒருங்குற ஆடி நின்றுள். 35

தனக்கென வாழ வந்த
தையலும் மன்றில் நின்று
சனக்குழாம் மகிழ்ந்து வாழ்த்த
தப்பின்றி ஆடக் கண்டு



86440
225C.C.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனத்திலே நிறைந்த செல்வன்
கோவலன் சலிப்பு மெய்தி
மனத்திலே சோர்வு கொண்டான்
மாதவள் குறிப்புங் கண்டாள். 36

ஆடிய அணிகள் மாற்றி
அணிமனை சென்று சேர்ந்து
கூடிய கலவைச் சாந்து
குளிர்பனி நீரில் தோய்ந்தாள்
நீடிய கூந்தல் காய
நிமிரகில் புகையும் இட்டாள்
வாடிய முடியும் ஐந்து
வகையென முடித்துக் கொண்டாள். 37

கைவளை விரலில் ஆழி
காற்சிலம் பிடையில் காஞ்சி
செய்யபொன் மதாணி மார்பில்
சிருறக் குணுக்கு காதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA,

மைவிரி கூந்தலின் மீது
வச்சிர மணியிற் சுட்டி
மெய்விரி ஒளியே வீச
மென்கொடி அணிகள் பூண்டாள். 38

முழுமதி அழகில் தோற்ற
முகத்தினில் பொட்டு வைத்தாள்
விழுமிய பாதம் இரண்டும்
விளங்க செங்குழம்பும் இட்டாள்

பளிதம் கஸ்தூரி புனுகு
பரிமளம் சேர்த்தாள் மெய்யில்
ஒளிவிட எறிக்கும் பட்டின்
ஆடையும் உடுத்திக் கொண்டாள். 39

தேசிய நூலகப் பிரிவு
மாநகர் நூலக சேவை
யாழ்ப்பாணம்

துங்கவான் மழை கண்டாடும்
சுந்தரத் தோகை போல
தங்கு புன்னகையும் கீர்த்தி
தவழ தன்எதிரில் வந்த
அங்கினர் அன்ன மன்ன
அழகியை அழகன் பார்த்தான்
பொங்குதன் குறையும் தீர்ந்து
பொலிந்துளம் சீர்மை ஆனான். 40

திருவிழா ஒழிந்தநல் தினத்தன்று காலே
இருளகல இரவிமேல் எழுவதற்கு முன்னம்
வருமலேயில் கடலாடி மகிழ்வதற்கு எண்ணி
பெருநகரமக்கள் பலர் பேரலேயாய்ச் சென்றார் 41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசிளங் குமரரவர் துணைவியர்கள் செல்வ
பெருவணிக மைந்தர் நனிபேரிசையும் நடனம்
வருமகளிர் கடலருகில் வந்து வளர்சோலை
தருநிழலில் இருக்கைபல சார்ந்து திரை வளைத்தார் 42

பண்டங்கள் விற்கவைத்த பலவிதமாய் விளக்கும்
அண்டியுள கலங்கரையின் அகல் விளக்கும் கலந்து
வெண்கடுகு சிறுமணலில் வீழ்ந்தாலும் அங்கே
கண்டெடுக்கக் கூடியதாய் காலுமிரு சோதி 43

ஓருவாத ஒளிஓசை ஒன்றிணைந்த கோலம்
திருவிழா நடக்குமுயர் களம்போலத் திகழும்
மருதாழை பூத்தொளிரும் வண்கரையும் அந்தா
மரைபூத்த மருதமென மாண்புறவே விளங்கும் 44

கடலாடி விளையாடிக் களிப்பதுவும் மிக்க
அடலாடு கடாப்போல பின்னசைந்து முந்தும்
திடலான சுருளலையும் தென்றலையும் காண
மடமாது மாதவியும் கோவலனும் எழுந்தார் 45

கோவேறு கழுதைமேல் கோவலனும் ஊர்ந்தான்
மாவேறு மாதவியும் வண்டியிலே போனல்
தூவேறு பூந்தாழை சோலைசூழ் மணலில்
பூவேறு புன்னைமர நீழற்கீழ் நின்ருர் 46

அலங்காரத் திரைகொண்டு அமைத்த விடம் நாப்பண்
பலமான தந்தக்கால் கட்டில் நயந்தேறி
இலய மார மீட்டி யாழ் குரலிணையக் காணும்
நலமாக ஏழிசையும் நயக்க நனி சொரிந்தார் 47



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தம் என்னும் நகை காட்டி
மொய்த்தமலர்கள் தலைசூடி
நித்தம் தனது நாயகனும்
நீலக் கடலைத் தழுவுகின்ற
புத்தம் புதுநீர்க் காவேரி
புதுமை நலமும் கூறியருள்
அத்தம் நிறைந்த வாளரசன்
அரசும் பாடி மகிழ்ந்தார்கள். 48


தங்கள் எண்ணம் இழையோட
தந்தி யாழில் அமைவாக
பொங்கும் பாவின் இசையூடு
பொருந்த மாதர் அணிதன்னை
அங்கு சொன்னான் கோவலனும்
அதுவும் கேட்டே அவள் ஆணின்
தங்கும் வனப்பை பாடவசை
தணியா மறுப்பும் வந்ததுவே 49

சந்தேகமுற்றார் அங்ஙனமே
தளரா அன்பு கைவிட்டார்
அந்தண் இன்பப் பொழில் நீங்கி
அகன்றாள் அவனும் நகர் சேர்ந்தான்
சிந்தை கலங்கி யாழ்விட்டு
செய்ய முகமும் மையானாள்
பந்தம் அறுந்த மாதவியும்
பைய நடந்தாள் தனிமையுடன். 50



86440

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாடிய முகத்தி னோடு
வண்டியில் திரும்பிப் போனுள்
தேடிய பொன் முடிச்சை
திடீரென இழந்தாள் போன்றே 51

கன்றிய மனத்தி னளும்
கடிமனை புகுந்தாள் யாழின்
ஒன்றிய இசையும் குயிலின்
ஓசையும் நிலவும் வீசும்
தென்றலும் வெறுத்தாள் உள்ளம்
சிறிதுமே அமைதி இல்லாள்
இன்றல வருவார் நாளை
என்றவள் ஏங்கி நின்ருள். 52



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதவி கடிதம்.

எண்ணினாள் அழைக்க வேண்டி
எழுதினாள் கடிதம் தாழை
வெண்ணிற மடலின் மிக்கு
வேண்டிய மழலைச் சொல்லால்
செண்பக மலரின் மொட்டால்
செம்பஞ்சுக் குழம்பு தோய்த்து
நண்ணிய தோழி கையில்
நல்கினாள் தூது செல்ல. 53

வாங்கிய மடலைக் கொண்டு
வந்தனள் வசந்த மாலை
ஆங்கொரு தெருவின் ஊடே
அவனையும் கண்டாள் நீட்ட
ஓங்கிய இகழ்ச்சி செய்தே
ஓலையும் வாங்கான் ஈதும்
பாங்குற நடிப்பாள் அன்னாள்
பலவித நடிப்பில் ஒன்றாம், 54

மாயமாய் பலபொய் கூட்டும்
மாயத்தாள் என்னைக் கூட்டி
நேயமாய் நடித்தாள் வாழ்வில்
நீர்மையும் அறிந்தேன் என்றான். 55

வந்தவள் தோழி சொன்ன
வார்த்தையும் கேட்டு வாடி
இந்த நல் மாலை அல்லால்
காலையில் காண்போம் என்றாள். 56



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையும் சோர்ந்தாள் பூவின்
சேக்கையும் பொருந்தாள் ஆகி
நொந்தனள் உருகி மாழ்கி
நோவுடன் உயிர்த்து நின்றாள். 57

வேறு

கண்ணகி போடு கோவலன் கூடி
கடிநகர் நீங்கிக் கரந்ததும் அறிந்து
பெண்ணவள் கலங்கிப் பெருமூச்சு எறிந்து
பெருந்துயர் அடைந்து பேதுறல் உற்றாள் 58

அவள்துயர் அறிந்த கோசிகன் என்பான்
ஆறுதல் கூற வருதலும் கண்டு
அவனைத் தொழுது திருமுகம் எழுதி
அளிசூழ் கூந்தல் முத்திரை யிட்டாள். 59

கண்மணி போன்ற அவரிடம் கடிதம்
காட்டிஎன் துயரைக் களைஎனக் கொடுத்தாள்
கொண்ட ஓலையை கையில் எடுத்து
கோசிகன் தேடிப் பலவழி திரிந்தான். 60

கோவலன் தன்னை ஒரு வாறாக
குறிப்பால் அறிந்தும் ஐயமும் தீர்ந்து
மேவிய கடிதம் நீட்டி மாதவி
வேதனை யோடு நிகழ்ந்தன விரித்தான் 61

மணிதனை இழந்த நாகம் போன்று
மாதா பிதாவும் அடைந்த கலக்கமும்
பிணிபடு சுற்றம் உயிரறு யாக்கை
போலுள சோர்வும் கேட்டு வருந்தினான். 62

கடிதம் தன்னைக் கைவிடா தவனாய்
கடிமணம் கமழப் பழையன நினைந்து
படித்தான் அவளே அல்லள் குற்றம்
தன்பால் என்றதன் உண்மை உணர்ந்தான். 63



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தைக் கனுப்ப ஏற்ற செய்தியும்
இசைந்தே கடிதம் இருப்பதா லிதை
எந்தன் வணக்கம் தெரிய இயம்பி
நான் தந்ததாக நல்கென அனுப்பினுன். 64

கோசிகனும் கோவலனின் மனப்பான்மை தன்னை
கூறவே மாதவியும் உள்ளம் மிகக் கலங்கி
பேசிடும் தன் குலத்தோடு கணிகையர்கள் வாழ்வைப்
பெரிதுவந்த தன்னையுயர் ஆடலையும் பழித்தாள். 65

மதுரையிலே கோவலனும் மாண்டதுவும் கேட்டு
மாதரசி சிலம்பேந்தி வழக்குரைத்து தீயால்
மதுரைநகர் அழித்ததுவும் மன்னனுயிர் விட்ட
மற்றுமுள செய்திகளை மாடலனும் கண்டான். 66

மாடலனும் காவிரிப்பூம் பட்டினத்தில் வந்து
மற்றவர்கள் கோவலன்தன் குடும்பத்தார் அறியக்
கூடல் கண்ட செய்திகளைக் கூறினுன் கேட்க
குலைந்து மனம் மாதவியும் வாழ்க்கையினை வெறுத்தாள். 67

பிறவழி அறியா நங்கை பேதுறல் உற்ருள் நேயன்
அறவழி இன்றி உற்ற அருந்துயர் எடுத்துக்கூறி
மறவழி நீக்கும் பௌத்த மாசறு துறவியான
அறவண அடிகள் பாதம் அன்பினில் வணங்கி நின்ருள். 68

பிறந்தவர் உறுவர் துன்பம்
பிறப்பிலார்க் கின்பம் ஆசை
அறுத்தவர்க் கின்பம் அல்லால்
அருதவர்க் கென்றும் துன்பம். 69

அறிக வென்றருளி ஐந்து
சீலத்தின் அமைதி காட்டி
பிறிதிவை உய்யக் கொள்வாய்
என்று பின் அருளினனே. 70



86440
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளின் அறவுரை கேட்டனள் மாதவி
அவரிடம் மகள் மணி மேகலை தானும்
கொடிதெனக் குலமுறை நீத்தனள் சரணாய்
கூந்தலைக் களைந்துபின் துறவிகள் ஆனார். 71

ஆங்கது கேட்டனர் அரசனும் மக்களும்
அன்னை சித்திராபதி அன்புசால் தோழியும்
ஓங்கிய நன்மணி உறுகடல் வீழ்ந்தவர்
ஒப்பநின்றார் துயர் கொண்டு வருந்தினர். 72

பெற்றவள் அனுப்பிய ஏவலின் படியே
மற்றவள் தோழி வசந்த மாலையும்
நற்றவப் பெண்டிர் மாதவி முன்னால்
சொற்றனள் ஊரார் பழிச்சொல் வருந்தி. 73

உற்ற என்காதலன் உறுதுயர் கேட்டு
உயிரையும் விடாது ஊரார் பழிச்சொல்
பெற்றதற் காளாய் பெரிது நாண் அற்று
பேதையாள் நானும் உயிர் வாழ்கின்றேன் 74

கண்ணகி கணவன் கடுந்துயர் பொறாது
கார்குழல் விரித்துக் கலங்கினாள் அரற்றி
எண்ணரும் பத்தினியாம் அவள் மகளாய்
இயல் மணிமேகலைக் கேற்றது துறவே 75

அறமிலாத் தீதுறு கணிகையர் வாழ்வை
அவள்மேற் கொண்டினி வாழ்ந்திடாள் அதனால்
திறம்பா இம்மொழி தாய்க்கும் தமர்க்கும்
செப்புக என்றாள் தோழியும் திரும்பினள் 76

வசந்த மாலையும் வாழ்வுள கைப்பொருள்
வழிபறி கொடுத்தவர் வலது போலவே
அகன்றனள் வந்தனள் கூறி வருந்தினள்
அரசனும் மக்களும் அடைந்தனர் துயரே. 77



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.

## மாதவி மாண்பு

குப்பையில் கிடந்த குன்றிமணி போலவும்
குறையே மிகுந்த சூழலில் வாழ்ந்தவள்
தப்பிய தனது தவறினை நினைந்து
தன்னிகர் இல்லாத் தவநிலை கொண்டாள். 78

பிறந்த குடும்பப் பேரினை வேரொடு
பெயர்த்துத் தீமையைப் பிடுங்கி எறிந்தனள்
மறந்தும் தனது மாண்பு கெடாது
மாநிலம் புகழ வாழ்ந்து காட்டினள். 79

கலையின் வளர்ச்சியெனக் காரிகை சிலரின்
அலைவுறும் வாழ்க்கையில் ஆடும் மடமையை
இலையெனக் கொழுத்தி ஏற்றங் காட்டி
தலையுறு தவத்தின் தலைமகள் ஆனாள். 80

ஊராரும் வியக்க தனது உறவினர் இரங்க மேலும்
பேராரும் அரசன் கண்டு பெரிதுமே திகைக்கத் தன்னை
நேராரும் பெற்ற தாயும் நெகிழ்ந்திடக் கணிகை வாழ்வின்
ஊராரும் அறியத் தொடர்பை உதறியே தள்ளிவிட்டாள். 81

சிறைபெறு கோட்டம் தன்னை சீரறக் கோட்டம் ஆக்கி
நிறைவுறு அமுத சுரபி யால்நிலை பசியும் போக்கி
குறைவறும் பெரும்பெண் ணென்றே குவலயம் போற்ற விளங்கும்
மறுவறு மணிமே கலையின் மாதாவாய் உயர்வு பெற்றாள். 82



பிரிவு
நூலக சேவை
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2255CC

ஆடலும் பாடலும் அணிகள்
சூடலும் சோலையும் சுற்றம்
கூடலும் குற்றமாம் தெய்வம்
தேடலே தெளிவு எனத் தெளிந்தாள். 83

சேற்றிற் பிறந்த செந்தா மரையாய்
நாற்றச் சங்கின் நன்மணி முத்தாய்
போற்றும் புலவர்கள் காப்பியத் தலைவியாய்
ஏற்றம் பெற்றுள் எழில்மா தவியாள். 84

நிதிவசம் கணிகையர் நேரிழை யாகி
மதிவசம் உற்றும் பாசம தற்றுநற்
கதிவசம் காண கடிதவம் நோற்றுள்
விதிவசம் தன்னை விளம்பவும் வேண்டுமோ. 85

முற்றும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லர் நூல்வரிசை - 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org